கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

ஞானம் 5 – ஒலி 32 | 07-08-2022

www.newwisdomministries.com



# “ சத்தியம் வத ”



தலையங்கம்

# எடுத்து வைத்திருந்தாலும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்



அருட்பணி. **சைமன் பீட்டர்**

இயேசு கிறிஸ்துவில் எனக்குப் பிரியமான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்களையும், எதிர்கால நல்வாழ்வுக்கான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தவார ஞான ஒலி ஐந்தாம் வருடத்தின் முப்பத்திரண்டாவது இதழ். இதுவரை தாங்கள் எங்களுக்குக் கொடுத்துவரும் ஆதரவிற்கும், உற்சாகத்திற்கும், செபத்திற்கும் எங்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த இதழ் பற்றிய உங்கள் மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்குத் தெரிவித்து, இன்னும் சிறப்பாக உங்களுக்குச் சேவை செய்ய உதவுங்கள். அதோடு எங்களின் நற்பணிகளுக்காக இறைவனிடம் மன்றாடுங்கள்.

ஒருமுறை ஒரு திருடன் வழக்கமாக இரவு வேளையில் திருடச் செல்லும்போது அவ்வூர் கோயிலுக்குச் சென்று செபித்துவிட்டு திருடச் செல்வது வழக்கம். அவ்வாறு ஒருநாள் கோவிலில் செபித்துவிட்டுச் செல்லும்போது, அந்தக் கோயில் மண்டபத்தில் ஒரு சாமியார் வழக்கமாக மாலை வேளையில் உபநியாசம் செய்வார், ஏராளமானபேர் அவரின் பேச்சைக் கேட்பார்கள். அவரின் பேச்சு மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். ஏனெனில், தனது சொற்பொழிவின் போது அவர் நிறைய ஜோக்குகளைச் சொல்வார். மக்கள் அதை ரசித்துக் கேட்பார்கள்.

அன்று குருஜி தனது சொற்பொழிவை முடித்தபிறகு மக்கள் எல்லாரும் சென்றவுடன், தனியாக அமர்ந்திருந்தார். அப்போது அந்தத் திருடன் அவரிடம் சென்று, வணங்கினான். அவர் நீ யாரப்பா? உனக்கு என்ன வேண்டும்? என்றார். அதற்கு அவன், சுவாமிஜி, நான் ஒரு திருடன், தினமும் இரவு திருடப்போவதற்கு முன் இந்த கோவிலுக்கு வந்து, எனது திருட்டுத் தொழில் நன்றாக நடக்க வேண்டும், நிறைய பொருட்கள் கிடைக்க வேண்டும் என்று மன்றாடிவிட்டுச் செல்வது வழக்கம். ஆனால், மக்களுக்குப் பயந்து உங்களின் அருகில் வராமல் தூரமாக நின்றுகொண்டு உங்களின் சொற்பொழிவை கேட்பேன். இன்றுதான் உங்களை நேரில் பார்க்க வாய்ப்பு கிடைத்தது. ஐயா, நீங்கள் எனக்கு ஒரு மந்திரம் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதை வைத்து நான் பிழைத்துக் கொள்வேன் என்றார்.

நீ ஏன் இந்த இழிவான திருட்டுத் தொழிலை செய்கின்றாய். மக்களை ஏமாற்றி வாழ்கின்றாய். வேறு நல்ல வேலைக்குச் செல்லலாமே என்று சுவாமிஜி அவனுக்கு அறிவுரை கூறினார். அதற்கு அவன். ஐயா, இந்தத் தொழிலைத் தவிர, எனக்கு வேறு எதுவும் தெரியாது. நான் என்ன செய்ய முடியும்? என்று சொன்னான். அதற்கு அந்தத் துறவி, சரி, உனக்கு ஒரு மிகச் சிறந்த மந்திரத்தைக் கற்றுத் தருகின்றேன். அதை நீ உண்மையாகக் கடைப்பிடித்தால் உன் வாழ்வு மிக நன்றாக மாறிவிடும். என்று என்றார்.

அந்த மந்திரம்- சத்தியம் வத - அதாவது உண்மையையே பேசு என்பதாகும்.

அதைக் கேட்ட திருடன், அதைத் தன் வாழ்வில் கடைப்பிடிப்பதாகச் சொல்லிவிட்டு, அன்றிரவு அந்த நாட்டு அரசனின் அரண்மனைக்குத் திருடச் சென்றான். அவன் அந்த அரண்மனைக்குள் எப்படி நுழையலாம் என்று அந்த அரண்மனை மதில் சுவரைச் சுற்றிவரும்போது, அரசனும். மாறுவேடத்தில் அங்கு வந்தார். அப்போது அந்தத் திருடனைப் பார்த்து யார் நீ? என்று கேட்டார். அதற்கு அந்தத் திருடன், தான் ஒரு திருடன் என்றும், இந்த அரண்மனையில் திருட வந்ததாகவும் சொன்னான். அதற்கு அந்த அரசன், நானும் திருடன்தான். எனக்கு பக்கத்து ஊர், நானும் உன்னோடு வருகின்றேன். கிடைப்பதில் பாதியை எனக்குக் கொடுத்துவிடு என்றார். அந்தத் திருடன் அதற்கு சம்மதித்தான்.

அரசருக்கு இரகசியப் பாதைகள் அனைத்தும் தெரிந்திருந்ததால், அரசர் அவனை அரண்மனை கஜானா இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு இருந்த ஓர் இரும்புப் பெட்டியை உடைத்துத் திறந்தபோது உள்ளே மூன்று மாணிக்கக் கற்கள் இருந்தன. அப்போது அந்தத் திருடன் அதில் இரண்டு மாணிக்கக் கற்களை எடுத்து அதில் ஒன்றைத் தனக்கும், மற்றொன்றை கூடவந்த திருடனாய் நடித்த அரசருக்கும் கொடுத்துவிட்டு, ஒரு மாணிக்கக் கல்லை மட்டும் அந்தப் பெட்டியில் வைத்து மூடினான். அதற்கு அரசர் அந்த மூன்றாவது கல்லையும் நாம் எடுத்துக்கொள்ளலாம் என்று திருடனிடம் கூறினார். அதற்கு அந்தத் திருடன், எல்லாக் கற்களையும் நாமே எடுத்துக் கொள்ளக் கூடாது. பாவம் நம் அரசர். அவருக்கு ஒரு கல்லையாவது விட்டுவிட்டுப் போவோம் என்று சொன்னான். திருடனின் நல்ல மனதை அறிந்த அரசர், சரி வா போவோம் என்று இருவரும் வெளியே வந்தார்கள். அரசர், சரி நீ போ, நானும் என் வீட்டுக்குப் போகின்றேன் என்று அவர் போவதுபோல நடித்தார், ஆனால் அந்தத் திருடனை அவனறியாமல் பின்தொடர்ந்து சென்று, அவன் வீட்டை அறிந்து கொண்டார்.

அடுத்த நாள் அரசவை கூடியவுடன், அரசன், நமது அரண்மனைக்குள் நேற்று இரவு திருடர்கள் நுழைந்து கஜானாவிற்குள் இருந்த மாணிக்கக் கற்களைத் திருடிவிட்டதாக நம் நாட்டு உளவாளிகளின் மூலமாக அறிகின்றேன் என்று அறிவித்தார். அதற்கு நிதியமைச்சர். அரசே அப்படியொன்றும் எங்களுக்குத் தெரியவில்லையே, உளவாளிகள் சொன்னது உண்மையா என்பதை அறிந்து வருகின்றேன் என்று அவர் அரச கஜானா அறைக்குச் சென்று பார்த்தார். அங்கிருந்த பெட்டியில் ஒரே ஒரு மாணிக்கக் கல் மட்டும்தான் இருந்தது. அப்போது நிதியமைச்சர், அங்கு தன்னைத் தவிர யாரும் இல்லாததால், அந்த ஒரு மாணிக்கக் கல்லை எடுத்து தனது தலைப்பாகைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு அரசரிடம் வந்து, ஆம் அரசே, உளவாளிகள் சொன்னது உண்மைதான், அங்கிருந்த மூன்று மாணிக்கக் கற்களையும் திருடர்கள் திருடிவிட்டார்கள் என்று சொன்னார்.

என்ன? மூன்று கற்களையும் காணவில்லயா? என்றார். அதற்கு ஆம் அரசே, ஒரு மாணிக்கக் கல்கூட அங்கு இல்லை. அந்தப் பெட்டி காலியாகத்தான் உள்ளது என்றார் நிதியமைச்சர். அப்போது அரசர், எனக்கு மற்றொரு தகவலும் கிடைத்துள்ளது என்றவர், அங்கிருந்த சேவர்களை அழைத்து அந்தத் திருடன் வசிக்கும் வீட்டின் விலாசத்தைக் கொடுத்து, அங்கு சென்று, அவனை அழைத்துவரச் சொன்னார். வீரர்களும் அரசன் கட்டளைப்படி அந்தத் திருடனை அரசவைக்கு அழைத்து வந்தார்கள்.

தான் நேற்று இரவு சுவாமிஜி அவர்கள் சொன்ன மந்திரம் – சத்தியம் வத – அதாவது உண்மை பேசு என்பது அவனுக்கு நினைவுக்கு வந்தது. அதன்படி, அவன் உண்மையைப் பேசவேண்டும் என்பதை உணர்ந்து, அந்தத் திருடன் தனது தவறை எல்லோர் முன்னும் ஒப்புக் கொண்டான். அரசே இதோ, நான் திருடிய அந்த மாணிக்கக் கல் என்று அந்தக் கல்லை அரசன் முன் வைத்துவிட்டு, தனது தவறுக்காக மன்னிப்புக் கேட்டான். அரசனும், இதோ, மற்றொரு மாணிக்கக் கல் என்று தன்னிடம் இருந்த அந்தத் திருடன் தன்னிடம் கொடுத்த அந்த மாணிக்கக் கல்லை எடுத்து அரசவையின் முன் வைத்துவிட்டு அந்த திருடனிடம், நேற்று உன்னோடு வந்த திருடன் வேறு யாருமில்லை, நான்தான். மாறுவேடத்தில் நகர் வலம் வந்தபோது, உன்னிடம் திருடனாய் நடித்தேன் என்றார். அனைவருக்கும் ஆச்சரியம்.

அரசர், நிதியமைச்சரைப் பார்த்து, அமைச்சரே, அந்த மூன்றாவது மாணிக்கக் கல்லை எடுத்து இங்கு வையுங்கள் என்றார். அதற்கு அவர், அரசே, நாங்கள் மூன்று தலை முறையாக உங்களுக்கு சேவை செய்கின்றோம். அப்படிப்பட்ட என்னை நீங்கள் சந்தேகிக்கலாமா? என்று சொன்னார். நிதியமைச்சர் பொய் பேசியதை அரசர் ஏற்றுக் கொள்ளவில்லை. நீங்களே அந்த மாணிக்கக் கல்லை எடுத்துக் கொடுத்துவிடுங்கள் இல்லை என்றால், இப்போதே, உங்கள் ஆடைகளைக் களைந்து சோதிக்க வேண்டி வரும் என்றவுடன், அமைச்சர், அரசே என்னை மன்னித்துவிடுங்கள், சபலத்தில், யாருக்கும் தெரியாது என்று அந்த மாணிக்கக் கல்லைத் திருடிவிட்டேன் என்று சொல்லி, தனது தலைப்பாகைக்குள் மறைத்து வைத்திருந்த மாணிக்கக் கல்லை எடுத்து அரசரிடம் கொடுத்தார்.

அதற்கு அந்த அரசர், அவரை நிதியமைச்சர் பதவியிலிருந்து நீக்கி, அவரை அரசவையிலிருந்து வெளியே அனுப்பிவிட்டார். மக்களையும், அரசவையையும் பார்த்து, இனிமேல், நம் நாட்டின் நிதியமைச்சராக, இந்தத் திருடனையே நியமிக்கின்றேன். ஏனெனில், அவர் உண்மையையே பேசினார். தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டார். நாட்டின்மீதும், அரசரின் மீதும் பற்று வைத்துள்ளார்.

இப்படி உண்மை பேசுபவரே நமது நாட்டின் நிதியமைச்சராக இருக்க தகுதியானவர் என்று அரசர் சொன்னார். அப்போது மக்கள் அனைவரும் புதிய நிதியமைச்சர் வாழ்க, உண்மை பேசும் நிதியமைச்சர் வாழ்க என்று கோஷம் எழுப்பினார்கள்.

அதன்பிறகு, அந்த முன்னாள் திருடன், உடனே கோவிலுக்குச் சென்று அந்த சுவாமிஜியைக் கண்டு அவர் காலில் விழுந்து நடந்த அனைத்தையும் அவரிடம் விவரித்தார்.

சுவாமிஜி, நீங்கள் கொடுத்த அந்த மந்திரத்தின்படி ஒரே ஒருமுறைதான் உண்மை பேசினேன். அதற்கே அந்த மந்திரம் என்னை இந்த நாட்டின் நிதியமைச்சராக்கிவிட்டது.

இந்த வாழ்வின் இரகசியம் தெரியாமல், குருடனாய், திருடனாய் முட்டாளாய் இதுவரை வாழ்ந்துவிட்டேன். இப்போதுதான் உண்மையின் உண்மை தெரிந்துள்ளது. இனி என் வாழ்வு உண்மையிலேதான் பயணிக்கும் என்றாராம்.

உண்மை யாருக்கும் அவ்வளவு எளிதாகப் புரிந்துவிடாது. யார்மீது அதற்கு பற்றுள்ளதோ, அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும், எந்த வழியிலாவது சத்தியம் அவர்களை வந்தடையும்.

இருளில் வாழ்பவர்களில் யாரெல்லாம் அந்த சத்திய ஒளிக்காக உள்ளார்ந்த ஏக்கத்தோடு இருக்கின்றார்களோ அவர்களின் இருளை இறைவன் ஒளிமயமாக்குவார்.

ஆண்டவரே, நீரே என் ஒளி, விளக்கு. ஆண்டவர் என் இருளை ஒளிமயமாக்குகின்றார். - 2 சாமுவேல் 22:29

இயேசுவை மறுதலித்த இராயப்பரை அந்த உண்மை விடுவித்தது.

முழுப்பொய்யான யூதாஸ் இருளைவிட்டு வரத் தகுதியற்றவனாய், நித்தியத்துக்கும் இருளாவே ஆனான்.

இயேசுவை நம்புகின்ற அனைவரும் கடவுளுக்கு ஏற்றவரானார்கள். புதுவாழ்வைப் பெற்றார்கள்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுள்தாம் விடுவிப்பார். - உரோமையர் 7:25

கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள் - உரோமையர் 8:14

ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு. - 2 கொரிந்தியர் 3:17

நேர்மை மனமாற்றம் அடைவோரை விடுவிக்கும். - எசாயா 1:27

உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள், உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும் என்றார் இயேசு . - யோ. 8:32

Three things cannot hide for long:

THE MOON, THE SUN

and the

TRUTH.

- Gautama Buddha



# விவிலியம் அறிவோம் – 50



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## யாக்கோபு எகிப்திற்குச் செல்லுதல்

எபிரோனில் வாழ்ந்துவந்த யாக்கோபு வீட்டை விட்டுப் புறப்பட்டு பெயேர்செபா செல்கிறார். அவர் ஆரானுக்குப் புறப்பட்டுச் செல்வது வரை (தொ.நூ.28:10) அங்குதான் தனது பெற்றோருடன் வாழ்ந்துவந்தார். பெயேர்செபாவில்தான் யாக்கோபின் தந்தையான ஈசாக்கு கடவுளின் ஆசியைப் பெற்றார் (தொ.நூ. 26:23-25). ஈசாக்குடன் அவருக்கு இருந்த தொடர்புதான் யாக்கோபை பெயேர்செபாவுக்குச் செல்லவைக்கிறது. பெயேர்சேபாவில் அவர்தம் தந்தை ஈசாக்கின் கடவுளுக்குப் பலிகள் ஒப்புக்கொடுக்கிறார் (தொ.நூ. 46:1). அங்கே அவர் ஒரு காட்சி காண்கிறார். கடவுள் அவருக்குக் காட்சியளித்து அவரை அழைக்கிறார். யாக்கோபும் இதோ அடியேன் எனப் பதிலளித்துக் கடவுள் கூறுவதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்.




கடவுள் அவருக்கு உறுதியளித்து, அவரை எகிப்திற்குச் செல்ல அஞ்சவேண்டாம் என்கிறார். உன்னை பெரிய இனமாக வளரச்செய்வேன் என்ற வாக்குறுதியைப் புதுப்பிக்கிறார். மேலும் நானும் உன்னோடு எகிப்திற்கு வருவேன். உன்னை நான் அங்கிருந்து மீண்டும் அழைத்து வருவேன். யோசேப்பு தன் கையாலே உன் கண்களை மூடுவான் என வாக்குறுதியளிக்கிறார். யூதக் குடும்பங்களில் உள்ள ஒரு பழக்கத்தின்படி தந்தை இறக்கும்போது மூத்தமகன் அவரது கண்களை மூடுவது வழக்கம். யாக்கோபின் அன்புக்குரிய மனைவியான ராகேலின் மூத்தமகன் யோசேப்பு. எனவேதான் யாக்கோபு இறக்கும்போது யோசேப்பு அவருடன் இருப்பார் என்றும், யாக்கோபின் கண்களை மூடுவார் என்றும் கடவுள் வாக்களிக்கிறார் (தொ.நூ. 49:33-50:1).

யாக்கோபு ஏன் பெயேர்செபாவுக்கு வந்தார்? என்பதற்கான காரணம் கடவுள் அவருக்கு அளிக்கும் உறுதிமொழிகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. யாக்கோபிற்கும் அவரது வழிமரபினருக்கும் வாக்களிக்கப்பட்ட நாட்டைவிட்டு வெளியே செல்லவிருக்கிறார். எதிர்காலம் கேள்விக்குரிய ஒன்றாக இருக்கிறது. இந்தச் சூழலில்; எகிப்திற்குப் போவது என்ற அவரது தீர்மானம் சிறப்பானது என்பதை கடவுள் அளிக்கும் வாக்குறுதிகள் உறுதிப்படுத்துகின்றன. யாக்கோபு தனது புதல்வர்கள், அவர்களின் மனைவியர், பிள்ளைகள் மற்றும் அவரது புதல்வியுடனும்; எகிப்திற்குப் புறப்படுகிறார். தொ.நூ. 46:26 யாக்கோபின் புதல்வர்களுடைய மனைவியரைத் தவிர அவரது வழிமரபாக எகிப்தில் குடிபுகுந்தோர் மொத்தம் அறுபத்தாறுபேர் எனக் கூறுகிறது. ஆனால் அதற்கு அடுத்த சொற்றொடர் எகிப்துநாட்டில் யோசேப்பிற்குப் பிறந்த புதல்வர்களோ இருவர். ஆகவே எகிப்தில் குடிபுகுந்த யாக்கோபின் குடும்பத்தார் எல்லோரும் எழுபதுபேர் ஆவர் எனப் பதிவு செய்கிறது. மொத்தக் கூட்டுத்தொகையில் சில குளறுபடிகள் உள்ளன. பென்யமினுடைய புதல்வர்கள் பட்டியல் சில இடங்களில் வித்தியாசமாக உள்ளன. உதாரணமாக எண் 26:38-40; 1 குறிப்பேடு 7:6 மற்றும் 8:1-2 ஆகிய இடங்களில் வருகின்ற பட்டியல்களைக் கூறலாம். இந்த வித்தியாசங்களைக் கண்டுகொள்ளாமல் எண் எழுபதிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் எழுபது, பத்துமுறை ஏழு என்ற முழுமையான எண்ணின் கூட்டுத்தொகையாக வருகிறது. மேலும் விப 1:5 இல் எகிப்திற்குச் சென்ற யாக்கோபின் குடும்பத்தினர் மொத்தம் எழுபது பேர் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பிரிவில்

கொடுக்கப்பட்டுள்ள பட்டியலின்படி யாக்கோபின் குடும்பத்தினர் அனைவரும் எகிப்து செல்கின்றனர்.

யாக்கோபின் குடும்பத்தினர் கோசேன் நிலப்பகுதியை அடைந்தபோது யாக்கோபு யோசேப்பிற்கு யூதா மூலமாகச் செய்தி அனுப்புகிறார். யோசேப்பு இஸ்மயேலர்களுக்கு விற்கப்படுவதற்கும், அதனால் அவர் தந்தையைப் பிரிவதற்கும் காரணமாக இருந்தவர் யூதா. இப்போது யாக்கோபும் யோசேப்பும் ஒன்றிணைவதற்கும் அவரே காரணமாகிறார். யாக்கோபு வந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் அவரைச் சந்திப்பதற்காக யோசேப்பு விரைந்து வருகிறார். இருவரின் சந்திப்பும் அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. யோசேப்பு தந்தையைக் கண்டவுடன் அவரை அரவணைத்து அவர்தோளில் சாய்ந்துகொண்டு அழுகின்றார். யாக்கோபு யோசேப்பிடம், இப்பொழுது நான் சாகத் தயார். நீ உயிரோடுதான் இருக்கிறாய்! உன் முகத்தைக்



கண்ணாரக் கண்டுவிட்டேன்! எனக் கூறுகின்றார். அதன்பின் யோசேப்பு தனது தந்தையிடமும் சகோதரர்களிடமும் அவர்களின் வருகையையும், அவர்களின் தொழில் பற்றியும் பார்வோனிடம் அறிவிக்கச் செல்வதாகக் கூறுகின்றார். பார்வோன் உங்களை வரவழைத்து உங்கள் தொழில் என்ன? என்று கேட்கும்பொழுது, நாங்கள் எங்கள் மூதாதையரைப்போல் மேய்ப்பர்களாக இருக்கிறோம் என்று சொல்லுங்கள் என்கிறார்.

அதன்பின் யோசேப்பு தன்னுடைய சகோதரர்கள் சிலருடன் சென்று அவருடைய தந்தையும் சகோதரர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் வந்திருப்பதை பார்வோனுக்குக் கூறுகிறார். மேலும் அவரது சகோதரர்கள் தாங்கள் ஆடு மேய்ப்பவர்கள் என்றும் கானான் நாட்டில் பஞ்சம் மிகக் கடுமையாய் இருப்பதாலும், மந்தைகளுக்கு மேய்ச்சல் இல்லாதுபோனதாலும், சிறிதுகாலம் இந்நாட்டில் தங்கி இருக்க வந்திருக்கிறோம் எனப் பார்வோனிடம் தெரிவிக்கின்றனர். அவர்கள் கோசேன் பகுதியில் தங்குவதற்கு பார்வோன் அனுமதி தருகிறார். மேலும் அவர்களில் திறமையானவர்களை பார்வோனின் மந்தைகளுக்கு அதிகாரிகளாக நியமிக்கவும் பணிக்கிறார். பார்வோனின் இந்த நியமனம் அவர்கள் எகிப்தில் சட்டப்படி வாழ்வதற்கான அனுமதியாகவும் உள்ளது. யோசேப்பு அவர்களைப் பொறுப்புடன் கவனித்துக் கொள்வதற்கும் வழிவகை செய்கிறது. அடுத்ததாக யாக்கோபும் பார்வோனும் சந்திக்கின்றனர். பார்வோன் யாக்கோபை நோக்கி உமது வயது என்ன? என வினவுகிறார். யாக்கோபு பார்வோனிடம், என் வாழ்க்கைப் பயண நாள்கள் நூற்றுமுப்பது ஆண்டுகள் என்கிறார். எகிப்தியர்கள் ஒரு மனிதனின் நிறைவான வாழ்க்கைக் காலம் நூற்றுபத்து ஆண்டுகள் எனக் கருதினர். யாக்கோபு அதையும் தாண்டி வாழ்கிறார். யாக்கோபின் பதிலில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். அவர் தனது வாழ்க்கையை ஒரு பயணமாகச் சித்தரிக்கிறார். இது யாக்கோபு மேற்கொண்ட பல பயணங்களைக் குறிப்பதாக இருக்கலாம். இறுதியாக அவர் எகிப்திற்குப் பயணித்திருக்கிறார். யோசேப்பு அவரது குடும்பத்தினர் எகிப்தில் தங்குவதற்கு தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறார்.

யாக்கோபு எகிப்திற்கு வந்தபின் பதினேழு ஆண்டுகள் உயிருடன் வாழ்கிறார். அவர் யோசேப்பைப் பிரியுமுன் அவருடன் சேர்ந்து வாழ்ந்த ஆண்டுகளும் பதினேழுதான் (தொ.நூ. 37:2). இந்த ஒற்றுமை யாக்கோபு எகிப்தில் வாழ்ந்த காலத்திற்கு ஒரு முழுமையைக் கொடுப்பதாக உள்ளது. யாக்கோபின் வாழ்நாள்கள் முடிவுக்கு வருவதை உணர்ந்த அவர் யோசேப்பைப் பார்க்க விரும்புகிறார். யோசேப்பிடம் அவர் இறக்கும்போது எகிப்தில் அடக்கம் செய்யக்கூடாது என்றும் அவருடைய குடும்பத்தினரின் கல்லறைகள் அமைந்துள்ள மக்பேலா குகையில் தன்னை அடக்கம் செய்யவேண்டும் எனவும் கூறி அவரிடம் உறுதிமொழி வாங்கிக் கொள்கிறார். குடும்பக் கல்லறைகள் இருக்கின்ற இடத்தில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அடக்கம் செய்வது பண்டையகாலத்தில் வழக்கமாக இருந்தது. இது அந்த குடும்பத்தினரின் பல தலைமுறைகளை ஒன்றிணைத்தது. மேலும் அந்த நிலப்பரப்பு இந்த குடும்பத்திற்குச் சொந்தமானது என்பதை நிரூபிப்பதற்கு ஆதாரமாகவும் இருந்தது. மேலும் யாக்கோபு எகிப்திற்கு வருமுன் பெயேர்செபாவுக்குச் சென்று அவருடைய முன்னோரின் கடவுளுக்கு பலி செலுத்தி வழிபட்டதையும் இங்கே நாம் நினைவு கூரலாம். கடவுள் தம் முன்னோர்களுக்கும் தனக்கும் வாக்களித்த அந்த நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு யாக்கோபு விரும்பவில்லை. நானும் உன்னோடு எகிப்திற்கு வருவேன். உன்னை நான் அங்கிருந்து மீண்டும் அழைத்து வருவேன் (தொ.நூ. 46:4) என கடவுள் உறுதி அளித்ததால் அவர் எகிப்திற்கு வந்தார். யோசேப்பு தனது தந்தையின் தொடைமீது கைவைத்து ஆணையிட்டு உறுதிமொழி தருகின்றார்.

யோசேப்பு ஆணையிட்டு உறுதிமொழி அளித்தபின், இஸ்ரயேல் படுக்கையின் தலைப்பக்கம் திரும்பித் தொழுதார் (தொ.நூ. 47:31) எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் கடவுளைத் தொழுதாரா அல்லது யோசேப்பைத் தொழுதாரா என்பது

தெரியவில்லை. ஒருவேளை கடவுளையும் யோசேப்பையும் மனதில் நினைத்தவராக அவர் தொழுதிருக்கலாம். யாக்கோபு தனது இறப்பிற்குத் தயாரிப்பாக இன்னுமொரு காரியத்தையும் செய்கிறார். யோசேப்பிற்குப் பிறந்த இரண்டு பிள்ளைகளையும் தனது புதல்வர்களாகத் தத்தெடுத்து அவர்களை குலங்களாக மாற்றுகிறார். யாக்கோபு உடல் நலமில்லாமல் இருக்கிறார் என்று யோசேப்பிற்குக் கூறப்படுகிறது. யோசேப்பும் அவரது இரண்டு மகன்களும் யோசேப்பைச் சந்திக்கவருகிறார்கள். யோசேப்பு வந்ததை அறிந்ததும் யாக்கோபு படுக்கையிலிருந்து எழுந்து அமர்கிறார். அப்போது பெத்தேலில் நடந்த ஒரு நிகழ்வை நினைவு கூருகிறார். பெத்தேலில் எல்லாம் வல்ல இறைவன் யாக்கோபுக்குக் காட்சியளித்து, ஆசி வழங்கி, நான் உன்னைப் பல்கிப் பெருகச் செய்வேன். உன்னைத் திரளான மக்கள் கூட்டமாக ஆக்குவேன். இந்நாட்டை உனக்கும் உனக்குப் பின் உன் வழிமரபினர்க்கும் என்றுமுள உடைமையாகத் தருவேன் (தொ.நூ. 48:3-4) என வாக்களித்தைக் கூறுகின்றார். யாக்கோபு கடவுள் அவருக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கூறுவதன் மூலம் தான் தத்தெடுக்கப் போகும் யோசேப்பின் புதல்வர்களும் அந்த வாக்குறுதியின் பங்குதாரர்களாக மாறுகிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறார்.

யோசேப்பின் புதல்வர்களைத் தத்தெடுக்கும் நிகழ்வு ஒரு சடங்காகவே நடைபெறுகிறது. அவர்களைத் தத்தெடுப்பதன் வழியாக யாக்கோபின் உரிமைச் சொத்தில் அவர்களும் பங்குபெற உரிமையுள்ளவர்களாகிறார்கள். அவர்களைத் தத்தெடுப்பதற்காக நடத்தப்படும் சடங்கு அமுராவின் சட்டத்தில் எழுதப்பட்டதை ஒத்ததாக உள்ளது. உகாரித்துபாடம் ஒன்றில் தாத்தா தனது பேரனை தத்தெடுப்பது பதிவுசெய்யப்பட்டுள்ளது. யோசேப்பின் புதல்வர்களை யாக்கோபு தத்தெடுப்பதன் வழியாக யோசேப்பு தலைமகனுக்கு கிடைக்கக்கூடிய இரண்டு மடங்கை பெறுகிறவராகிறார். யோசேப்பு தனது புதல்வர்களை யாக்கோபின் அருகில் கொண்டு வருகிறார். யோசேப்பின் தலைமகனான மனாசேயை யாக்கோபின் வலதுபக்கத்திலும் இளையவனான எப்பிராயீமை இடது பக்கத்திலுமாக நிறுத்துகிறார். தலைமகனான மனாசே தலைமகனுக்குரிய ஆசீரைப் பெறவேண்டும் என்பது அவரது விருப்பமாக இருக்கின்றது. ஆனால் யாக்கோபு, தம் கைகளைக் குறுக்காக நீட்டி வலக்கையை இளையவன் எப்ராயிமின் தலைமீதும் இடக்கையை தலைமகன்



மனாசேயின் தலைமீதும் மாற்றி வைத்தார் எனக் கூறப்படுகிறது. அவர்களை ஆசிர்வதிக்குமுன் யாக்கோபு யோசேப்பை ஆசிர்வதிக்கிறார். யாக்கோபு மனாசேயின் தலைமீது இடக்கையையும் எப்ராயிமின் தலைமீது வலக்கையையும் வைத்திருப்பது யோசேப்பிற்குப் பிடிக்கவில்லை. அவர் தந்தையின் கைகளை மாற்ற முயற்சிக்கின்றார். யாக்கோபு அதற்கு உடன்படவில்லை. இளையவன்தான் பெரியவனாயிருப்பான் என அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். இவ்வாறு இளையவனை மூத்தவனுக்கு மேலாக உயர்த்துகிறார்.

குலமுதுவர்கள் வரலாற்றை வாசிக்கும்போது இளைய மகன்கள் முக்கியத்துவம் பெறுவதைப் பார்க்கமுடிகிறது. உதாரணமாக, ஆபிரகாமின் புதல்வர்களுள் மூத்தவனான இஸ்மயேல் முக்கியத்துவம் பெறவில்லை; ஈசாக்குதான் முக்கியத்துவம் பெற்றார். ஈசாக்கின் புதல்வர்களில் இளையவனான யாக்கோபு தலைமகனுக்குரிய ஆசீரைப் பெற்று சிறப்பு பெற்றவராகிறார்; ஏசா சிறப்புரிமை பெறவில்லை. யாக்கோபின் புதல்வர்களில் இளையவனான யோசேப்பு தனது சகோதரர்களைவிட சிறப்பானவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப்போது அவருடைய மகன்களிலும் இளையவனான எப்பிராயீமுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. யோசேப்பின் புதல்வர்களை தனது புதல்வர்களாகத் தத்தெடுத்து அவர்களைக் குலங்களின் தந்தையர்களாக்கியதும், எப்பிராமுமுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறப்பாசீர் வழங்கியதும் யாக்கோபின் புதல்வர்களின் நடுவில் யோசேப்பிற்கு கிடைத்த தனிச்சிறப்பை வெளிப்படுத்துவதாவும் உள்ளது.

பயணம் தொடரும்...

One of the greatest titles in the world is **parent**,
and one of the biggest blessings in the world is to have
**parents** to call **mom** and **dad**.

- Jim DeMint



# ஞாயிறு மறையுரை

## பொதுக்காலம் 19-ம் ஞாயிறு

07-08-2022

முதல் வாசகம் – சாலமோனின் ஞானம் 18:6-9
இரண்டாம் வாசகம் – எபிரேயர் 11:1-2. 8-19
நற்செய்தி வாசகம் – லூக்கா 12:32-48


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ராபர்ட்**
உதவிப்பங்குத்தந்தை
புனித.விண்ணரசி அன்னை ஆலயம்
மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்




## இரவும் நலமே

இறை இயேசுகிறிஸ்துவில் பிரியமானவர்களே! இரவு என்ற வார்த்தையை கேட்டவுடனே நமக்கு பல வகையான எண்ண அலைகள் ஓடும். இரவு நேரத்திடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் நமக்கு மகிழ்ச்சியைத் தரலாம் அல்லது துன்பமாகவும் இருக்கலாம். அது நம் ஒவ்வொருவரின் நினைவுகளை அல்லது அனுபவங்களைப் பொறுத்தது.

விவிலியத்திலும் இரவுக்கு என தனி இடமுண்டு. அதிலும் குறிப்பாக, திருப்பாடல்களில் இரவு நேரம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. தி.பா 1:2-ல் யார் ஒருவர் இரவும் பகலும் திருச்சட்டத்தை சிந்திக்கின்றாரோ அவர் பேறுபெற்றவராக பார்க்கப்படுகின்றனர். தி.பா 6:7ல் பார்க்கின்றோம். எப்பொழுது ஒரு மனிதன் துன்பங்களால் துளைக்கப்படுகின்றானோ அப்போது அவன் ஒவ்வொரு இரவும் கண்ணீரால் தன் படுக்கை மிதக்கின்றது என்று செபத்தில் இறைவனோடு பேசுகின்றான். தி.பா.16:7ல் பார்க்கின்றோம். எனக்கு அறிவுரை வழங்கும் ஆண்டவரைப் போற்றுகின்றேன். இரவில் கூட என் மனச்சான்று என்னை எச்சரிக்கின்றது என்கின்றனர். தி.பா. 17:3ல் மாசற்றவரினின் மனச்சான்று கூறுகிறது.

என் உள்ளத்தை ஆய்ந்தறியும், இரவு நேரத்தில் எனைச் சந்தித்திடும், என்னைப் புடமிட்டுப் பார்த்திடும் எனவும் தி.பா 22:8ல் துயரத்தில் இருக்கக்கூடியவர் ஆண்டவரிடம் என் கடவுளே நான் பகலில் மன்றாடுகின்றேன், நீர் பதில் அளிப்பதில்லை. இரவில் மன்றாடுகின்றேன் எனக்கு அமைதி கிடைப்பதில்லை என்கின்றார். தி.பா. 14:16ல் ஆசாபு பாடுகிறார். பகலும் உமதே, இரவும் உமதே என. இதிலிருந்து திருப்பாடல் ஆசிரியர் இரவுக்கு தரும் முக்கியத்துவம் தெரிகிறது. தொடக்கநூலிலும் கூட கடவுள் ஒளியைப்படைத்து அவ்வொளி நல்லது எனக் காண்கிறார். இருளுக்கு இரவு எனப் பெயரிடுகிறார். ஒளியும் இருளும் இணைந்து ஒரு நாளாக மாறுகிறது. இரவைப் படைக்கின்ற இறைவன் இரவின் தெய்வமாகவே நாம் பார்ப்பதுதான் சாலச்சிறந்தது.

பலநேரங்களில் இரவு கெட்டது என நாம் தீர்மானித்துவிடுகிறோம். இரவை ஆபத்தான தருணமாக பார்க்கின்றோம். திருப்பாடல் ஆசிரியர் தி.பா: 23:4ல் சாவின் இருள் சூழ்ந்தப் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன் என்கிறார். இரவு என்பது இறைவனோடு தொடர்புடையது. தொடக்கநூல் 22:17ல் கடவுள் ஆபிரகாமை நோக்கி கூறுகின்றார். உன் வழிமரபை இரவில் இருக்கும் விண்மீன்களைப்போல் பலுகச் செய்வேன் என சத்தியவாக்கு தருகின்றார்.

தொடக்க நூல் 28: 10ல் இரவை கழிக்க கல்லைத் தலையணையாக வைத்து உறங்கும்போது யாக்கோபு கனவு காண்கிறார். இறைவனின் சத்திய வாக்கை பெறுகின்றார். அந்த இரவுதான் யாக்கோபின் நம்பிக்கை நிறைந்த இரவாக மாறிப்போகிறது. தொடக்கநூல் 32:27ல் யாக்கோபு இஸ்ரயேல் எனப் பெயர் பெறுவதும் இரவிலே. 2சாமுவேல் 7:2ல் பார்க்கின்றோம். தாவீது கடவுளுக்கு ஆலயம் கட்ட விரும்பும் போது,

ஆண்டவரின் வார்த்தை நாத்தானுக்கு அருளப்படுகிறது அதுவும் இரவில் தான்.

இதுபோல இரவு நேரமானது திருவிவிலியத்தில் மிகமிக முக்கிய பங்காற்றக்கூடிய ஒரு கால நேரம். இன்று இறைவனால் நமக்கு அருளப்பட்ட நற்செய்தியும் இரவில் விழித்து காத்துக் கொண்டிருக்கும் பணியாளனைப்போல காத்திருக்க அழைப்புவிடுக்கின்றது. இங்கு விழித்திருப்பது என்பது அறிவுதெளிவுடன் நம்முடைய விழிப்புணர்வை பயன்படுத்த எப்போதும் ஆயத்தமாக இருக்க அழைப்புவிடுப்பதற்கு ஒப்பாகும். இதைத்தான் இயேசு தன்னுடைய சீடர்களிடமும் எதிர்பார்க்கின்றார். இயேசு தன்னால் மட்டும் இறைப்பணியை செய்ய வேண்டும் என்று அல்லாமல், தன்னுடைய சீடர்களும் இறைப்பணி செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டார். யாரெல்லாம் அப்பணியை சிறப்பாக செய்தார்களோ அவர்களே இயேசுவின் பிம்பங்கங்களாக சமுதாயத்தில் வாழ்ந்திருக்கின்றனர். சுயநலத்தோடு அல்லாமல் பொதுநலத்தோடு அனைவரும் வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். இன்றைய சமுதாயத்தை சற்று அலசிப்பார்ப்போம். இறைவனை நினைத்து தியானிக்கக்கூடிய இரவாக இரவை பயன்படுத்தலாம். ஆனால் பல நேரங்களில் சமூக அநீதிகள் அரங்கேறும் நேரமாக இரவு நேரம் மாறிப்போகிறது. இறைவனால் படைக்கப்பட்ட இரவு நம்மை நாமே அன்றாடம் உழைக்கும் உழைப்புக்காக ஒய்வெடுத்து உடலுக்கு நல்ல புத்துணர்வு தர அடுத்தநாள் மீண்டும் உழைக்கப்புறப்படவே தரப்பட்டிருக்கிறது. நல்ல பணியாளர்களாக அவரின் வருகைக்காக காத்திருக்க சொன்ன இறைவனுக்கு நாம் அனுதினமும் நன்றியுள்ளவர்களாக வாழ அவர் நமக்கு கொடுத்த அந்த அற்புத இரவை நமது ஆற்றலை இரட்டிப்பாக்க பயன்படுத்துவோம். இன்றைய முதல்வாசகத்தில் இறைவனால் முன்னறிவிக்கப்பட்ட அந்த இரவை மூதாதையர்கள் அறிந்து கொள்வதையும் இரண்டாம் வாசகத்தில் இரவின் விண்மீன்கள் போல ஆபிரகாமின் தலைமுறைகள் செழித்தோங்கும் என்னும் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகள் போல் நாமும் இரவை நம்மை பிறரை வளர்த்தெடுக்கும் நல்ல நேரமாக மாற்றிட வரம் வேண்டுவோம்.

– ஆமென்





# பொதுக்காலத்தின் 19-ம் ஞாயிறு

**07-08-2022**

முதல் வாசகம் – சாலமோனின் ஞானம் 18:6–9
இரண்டாம் வாசகம் – எபிரேயர் 11:1–2. 8–19
நற்செய்தி வாசகம் – லூக்கா 12:32–48



**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியர்களாக விழிப்புணர்வு கொண்டவர்களாக, கடவுள் கொடுத்த பொறுப்பை சிறப்புடன் செய்பவர்களாக வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 19ம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய திருவழிபாடு நாம் இறைவன் மீது நம்பிக்கைக் கொடு அவருக்கு நம்பிக்கை உள்ளவர்களாக வாழ அழைப்புவிடுக்கிறது. நம்பிக்கை என்பது வாழ்வின் அடித்தளமாக இருந்தால் எத்தகைய துன்பத்தையும் எதிர்கொள்ள முடியும். நற்செயல்கள் பல புரிய முடியும் என்ற கருத்தை மையமாகக் கொண்டுள்ளது.

பகலினை அலங்கரிப்பது சூரியன், இரவினை அலங்கரிப்பது சந்திரன். மனித வாழ்வை அலங்கரிப்பது அவனது நம்பிக்கை. நம்பிக்கையில் நாம் வளர வளர, வாழ்வில் வரும் இன்னல்களையும், இடர்களையும் மன தைரியத்துடன் சந்திக்கும் மனப்பக்குவம் பெறுகிறோம்.

இன்றைய வாசகங்கள் நம்பிக்கையுள்ள பணியாளர்களாக வாழ அழைக்கின்றன. கடவுளுக்கும் அவருடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்களுக்கும் நம்பிக்கைகக்கு உரியவர்களாக இருப்பது காலத்தின் கட்டாயம் என்னுமோர் உயர்ந்த நெறியைப் போதிக்கின்றன.

ஆபேலை நேர்மையாளனாக மாற்றியது நம்பிக்கை. நோவாவை வெள்ளத்திலிருந்து காப்பாற்றியது நம்பிக்கை. ஆபிரகாமுக்கு ஈசாக்கைத் தந்தது நம்பிக்கை. குருடர்கள் பார்த்ததும், செவிடர்கள் கேட்டதும், முடவர்கள் நடந்ததும், இறந்தவர் உயிர் பெற்றதும், பாவிகள் மன்னிப்புப் பெற்றதும் நம்பிக்கையால்தான். நம்பிக்கையால் ஆகாதது ஒன்றுமில்லை. நம்பிக்கை உள்ளவனுக்கு மாமலையும் ஓர் கடுகாம் என்பதை திருவிவிலியம் நமக்குக் கற்றுத் தருகிறது.

விசுவாசத்தின் தந்தை ஆபிரகாமைப்போல் நாமும் கடவுள் மீது நம்பிக்கைக் கொண்டவர்களாக வாழவும், நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்ளவும், நம்பிக்கையோடு எந்நேரமும் விழிப்புடன் இறைவனின் வருகைக்காகக் காத்திருக்கவும் இத்திருப்பலி வழியான இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்தது அவர்கள் இறைவன்மேல் கொண்டிருந்த நம்பிக்கையே என்பதை எடுத்துரைக்கிறது இன்றைய முதல் வாசகம். கடவுளின் வாக்குறுதிகளின்மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கடவுள் முன்னிலையில் பெருமைப்படுத்தப்படுவார்கள் என்பதை விளக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவர்களாக மாறிய யூதர்களை நம்பிக்கையில் நிலைபெறச் செய்யவும், மீண்டும் அவர்கள் யூத மதத்திற்கத் திரும்புவதைத் தடுக்கவும் எழுப்பட்ட இத்திருமுகத்தின் ஒரு பகுதியே இன்றைய இரண்டாம் வாசகம். இறைவனின் நம்பகத்தன்மையை உணர்ந்துகொள்ளும் ஒருவரால் மட்டுமே நம்பிக்கை உள்ளவராய் வாழ முடியும் என்பதை அறிவுறுத்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்

1. அகத்திலே விசுவாச ஒளியை ஒளிரச் செய்யும் அன்பு இறைவா. உம் திருஅவையின் தலைவர்கள் அனைவரும் தமது சொல்லாலும், செயலாலும் மக்கள் மனங்களில் நம்பிக்கை ஒளியையும், இருள் சூழ்ந்த உள்ளங்களில் உம் திருஒளியையும் ஏற்றிவைக்கக்கூடிய வல்லமையையும் அற்றலையும் அவர்ளுக்குத் தந்து, அவர்கள் கடமை தவறாதவர்களாய், விழிப்புடன் செயல்படுபவர்களாய், நம்பிக்கையின் நாயகர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பும் கருணையும் கொண்ட தந்தையே இறைவா, ஆபிரகாம் உம்மேல் கொண்ட விசுவாசத்தின் வழியாகத் தன்னை வெளிப்படுத்தியதுபோல, கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை யாரும் பிரிக்க முடியாது என்ற சத்தியத்தின் மூலம் பவுலடியார் தன்னை வெளிப்படுத்தியதுபோல், தாழ்ச்சியாலும், தெய்வீக மாட்சியாலும் உமது திருமகன் தன்னை வெளிப்படுத்தயிதுபோல் விசுவாசம், அன்பு, தாழ்ச்சி வழியாக எம்மை வெளிப்படுத்தி உமது அன்பார்ந்த பிள்ளைகளாக வாழும் வரமருள் வேண்டுமெனனு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. எம்மைப் படைத்துக் காத்து வழி நடத்திவரும் அன்பு இறைவா. நாட்டை ஆள்வோரை உம் திருக்கரங்களில் ஒப்புக் கொடுக்கின்றோம். நாட்டின் ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும், மதநல்லிணகத்திற்கும் பங்கம் விளைவிக்காத சட்ட திட்டங்களை இயற்றி, வேற்றுமையில் ஒற்றுமை என்ற உலகமே வியந்து போற்றும் எம் பாரத நாட்டின் பண்பாட்டினை கட்டிக்காத்திடும் நல்ல தலைவர்களாய் விளங்கிட அருள்புரிய வேண்டுமென்று இறைாவ உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பும் கருணையும் நிறைந்த இறைவா. எங்கள் குடும்பங்களின் தேவைகளை நீர் அறிவீர். எதெது எங்களுக்குத் தேவையோ, எவையெல்லாம் எங்களுக்கு அவசியமோ அவற்றையெல்லாம் எங்களுக்குத் தந்தருளும். எங்கள் குடும்பங்களில் அன்பும், பண்பும் மலர்ந்த மணம்வீசவும், ஒருவரையொருவர் புரிந்து வாழவும் தேவையான ஞானத்தையும், விவேகத்தையும் எம்மீது பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## எச்.ஏ.கிறிட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்



தீங்கெ னக்கெவன் செய்யினும்
தாங்கி நன்மை தனைச்செய
ஓங்கு நல்மனம் உதவுவாய்
வீங்கு பேரருள் வித்தகா



இறைவா, இயேசுபிரானே, நல்லருளும். எதனோடும் ஒப்புமை கூற முடியாத நல்லறிவும் நிறைந்தவரே, நான் துன்புறுமாறும், மனக்கலக்கம் கொள்ளுமாறும் பிறர் செய்கின்ற துன்பங்களையெல்லாம் பொறுத்துக்கொள்ளும் மனத்தையும், தீமையே செய்தவர்களுக்கும் நான் நன்மை செய்யும் தெளிவான மனத்தையும் எனக்குத் தந்தருள வேண்டும்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி



சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM

## குறள் - 5

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு**

### குறள் விளக்கம்

கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துவோரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை.

### சிந்தனை

இருள், அநீதி, தீமை, துன்பம் எதுவும் இறை நம்பிக்கையாளரிடம் நெருங்காது. ஏனென்றால் நல்வினை, தீவினை இரண்டும் அவர்களை பாதிக்காது. இருவினைகளையும் சமமாக எடுத்துக் கொள்ளும் உறுதியான மனநிலையை இறைவனடி பணிந்தவர்கள் பெற்றிருப்பர்.

புத்தர் மனிதர்களை மூன்று வகையினராகப் பிரித்தார். முதல் வகையினர் பாறையில் செதுக்கிய எழுத்துக்களைப் போல அவர்கள் தங்கள் கோபத்தை வெகுநேரம் தக்க வைத்துக் கொண்டிருப்பவர்கள். இரண்டாம் வகையினர் மணலில் எழுதிய எழுத்துக்கள் போல அவர்களுக்கு விரைவில் கோபம் வரும் சிறிது நேரத்தில் மறைந்து போகும். மூன்றாம் வகையினர் நீரில் எழுதிய எழுத்துக்கள் போல், அவர்கள் யாருடைய வசைவையும் வதந்தியையும் கண்ணுறாமல் தங்கள் மனத்தையும் இதயத்தையும் எப்போதும் தூய்மையாக வைத்திருப்பார்கள்.

புத்தர் குறிப்பிடும் மூன்றாம் வகை மனிதர்கள் எப்படி தீமையால் பாதிக்கப்படாமல் தங்கள் மனதை தூய்மையாக வைத்திருக்கிறார்களோ அது போன்ற நிலையை இறைவனோடு நெருங்கிய உறவு கொண்ட உண்மையான இறையடியார்கள் பெற்றிருப்பர்.

இதனையை திருவிவிலியம் அன்பும் வாய்மையும் தீவினையைப் போக்கும். ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் ஒருவரைத் தீமையினின்று விலகச் செய்யும் என நீதிமொழிகள் 16:6

குறிப்பிடுகிறது. கடவுளை தனது ஆதாயத்திற்காக தேடுவோர் பலர். இன்ப நேரங்களை விட துன்ப நேரங்களில் மட்டுமே நிம்மதி தேடி இறை சந்நிதானத்தை தேடுகின்றனர் பலர். நிறை இன்பமாகிய இறைவனின் திருவடிகளை என்றும் மறவாது தேடுவோர் இவ்வுலக இன்ப துன்பங்களால் பாதிக்கப்படுவது இல்லை.

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சம் தீவினையை முற்றிலும் போக்கிவிடும். நல்வினைகளை பெருக்கும். இறையடியாருடைய அன்பும் வாய்மையும் தீவினைகளைப் போக்கும். அதேவேளையில் நல்வினைகளை பெருக்கும் தீவினை நீங்கி நல்வினை பெருக இறையடி பணிவோம்.

> Keep your heart pure. A pure heart is necessary to see God in each other.
> If you see God in each other, there is love for each other,
> then there is peace.
> - Mother Teresa



# வத்திக்கான் செய்திகள்









கடந்த ஆண்டு, கனடாவில் இருக்கும் மிகப் பழமையான உறைவிடப் பள்ளியில் நடத்தப்பட்ட அகழாய்வில் 200க்கும் மேற்பட்ட பெயரிடப்படாத கல்லறைகள் கண்டெடுக்கப்பட்டன. அதைப்பற்றிய தொடர் ஆய்வில் 1880 முதல் கனடாவில் நடந்தப்பட்ட உறைவிடப் பள்ளிகளில் உள்ளூர் பழங்குடியின குடும்பங்களிலிருந்து 1,50,000 மேற்பட்ட குழந்தைகள் வலுக்கட்டாயமாக அரசாங்கத்தால் இழுத்துவரப்பட்டு அரசாங்கத்தால் பொருளுதவி செய்யப்பட்டு, கத்தோலிக்க குருக்களால், மிக முக்கியமாக பெண் துறவு மடங்களால் நடத்தப்பட்ட உறைவிடப் பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு புது மொழிகளையும், வலுக்கட்டாயமாக கிறிஸ்தவராக்கும் முயற்சியும் நடந்தது. அவர்களின் கலாச்சாரம், மொழி அனைத்தும் மறுக்கப்பட்டு, புது கலாச்சாரம் திணிக்கப்பட்டது. அப்போது குழந்தைகள், துன்புறுத்தப்பட்டார்கள், உளவியல் அடிப்படையிலும், உடலளவிலும், பாலியல் அடிப்படையிலும் துன்புறுத்தப்பட்டார்கள். போதுமான இடவசதியில்லாததாலும், சத்தான உணவு, ஆரோக்கியமான சூழல் இல்லாததாலும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் இறந்ததாகவும், அவர்களின் மரணத்தைப்பற்றி அவர்களின் பெற்றோருக்குக்கூட சொல்லாமல், அந்தப் பள்ளி வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும், அதுவும் அங்கு படித்தக் குழந்தைகளை வைத்தே அவர்களின் கல்லறைகளைத் தோண்டினார்கள் என்ற செய்தியை அறிந்து உலகமே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஆதலால், அப்படிப்பட்ட 139 பள்ளிகள் 1998ம் ஆண்டு நிரந்தரமாக மூடப்பட்டது.

இந்த மாபெரும் கொடூரமான இன அழிப்பு பாவத்திற்குப் பரிகாரம் தேடவே, தனது மன்னிப்பைத் தெரிவிக்கவே பாப்பரசர் கனடாவிற்கு பயணத்தை ஏற்பாடு செய்தார்.

அதனால் பாப்பரசர், சமீபத்தில் கனடாவிற்கு சென்றபோது, அந்தப் பயணம் கத்தோலிக்க திருச்சபை கனடாவின் உள்ளூர் மக்களுக்கு, குழந்தைகளுக்குச் செய்த பேரழிவுப் பிழைக்காக மன்னிப்பு கேட்டார். அதற்காக, கனடாவில் காலெடியெடுத்து வைத்தவுடனே, அந்நாட்டின் பழங்குடி இன மக்களின் தலைவரைத் சந்தித்து அந்தத் தலைவர் ஆலம் டெசியாரியாயிஸ்-ஐப்போல தலைக்கிரீடம் அணிந்து, அவரின் கையை முத்தமிட்டு தனது மன்னிப்பையும், மனவருத்தத்தையும் தெரிவித்தார். ஒரு வாரம், பாப்பரசர், இந்தப் பேரழிவினால் பாதிக்கபட்ட அனைத்து பழங்குடி இன மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து, திருச்சபையின் தவறுக்காக தனது வருத்தத்தைத் தெரிவித்தார்.

பாப்பரசர் மன்னிப்பு கேட்டால் மட்டும் பத்தாது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரப் பணிகளைச் செய்யவேண்டும் என்று உள்ளூர் மக்கள் கேட்டுள்ளார்கள்.

மணிலாவில் யேசுசபை நடத்தும் பல்கலைக்கழகத்தில், ஜுலை 24ம் தேதி அன்று சட்டக் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் கொல்லப்பட்டார்கள்.

பாகிஸ்தானின் தேவ துவேஷச் சட்டம் கிறிஸ்தவர்களுக்கு எதிராக சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்படுகின்றது. 2017ல் ஒரு கிறிஸ்தவர் முகமதுநபி அவர்களுக்கு எதிராக பேசினார் என்று குற்றம் சாட்டப்பட்டு, சமீபத்தில் அவர் மரண தண்டனை கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். அவரது குடும்பம் அவர் அநியாயமாக குற்றம் சாட்டப்பட்டு அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்கள்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 19-ம் ஞாயிறு - 07.08.22

### 07.08.2022 – ஞாயிற்றுக்கிழமை

**முதல் வாசகம்** : சாலமோனின் ஞானம் 18:6-9
**இரண்டாம் வாசகம்** : எபிரேயர் 11:1-2, 8-19
**நற்செய்தி** : லூக்கா : 12:32-48

### 08.08.2022 – திங்கட்கிழமை

**முதல் வாசகம்** : எசேக்கியேல் 1:2-5. 24-28
**நற்செய்தி** : மத்தேயு 17:22-27

### 09.08.2022 – செவ்வாய்கிழமை

**முதல் வாசகம்** : எசேக்கியேல் 2:8-3:4
**நற்செய்தி** : மத்தேயு 18:1-5, 10-14

### 10.08.2022 – புதன்கிழமை

**முதல் வாசகம்** : 2கொரிந்தியர் 9:6-10
**நற்செய்தி** : யோவான் 12:24-26

### 11.08.2022 – வியாழக்கிழமை

**முதல் வாசகம்** : எசேக்கியேல் 12:1-12
**நற்செய்தி** : மத்தேயு 18:21-19:1

### 12.08.2022 – வெள்ளிக்கிழமை

**முதல் வாசகம்** : எசேக்கியேல் 16:1-15, 60, 63
**நற்செய்தி** : மத்தேயு 19:3-12

### 13.08.2022 – சனிக்கிழமை

**முதல் வாசகம்** : எசேக்கியேல் 18:1-10, 13, 30-32
**நற்செய்தி** : மத்தேயு 19:13-15



I am not
capable of
doing big things,
but I want
to do everything,
even the
smallest things,
for the
greater glory
of God.


St. Dominic Savio



# திருவிவிலியமும் திருக்குறளும்

## வழங்கும்

# ஆன்மீகச் சிந்தனை




**அதிகாரம் 15**

**பிறனில் விழையாமை**

**குறள் - 145**

எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

**பொருள்:** இச்செயல் எளியது என எண்ணிப் பிறனுடைய மனைவியிடம் நெறிதவறிச் செல்லுகின்றவன் எப்போதும் அழியாமல் நிலை நிற்கும் பழியை அடைவான் என்கிறார் வள்ளுவர்.

ஒருவன் தன் மடியில் நெருப்பை வைத்திருந்தால் அவனது ஆடை எரிந்துபோகாமலிருக்குமா?

ஒருவன் தழல்மீது நடந்து சென்றால் அவன் கால் வெந்துபோகாமலிருக்குமா?

பிறன்மனை நயப்பவன் செயலும் இத்தகையதே; அவளைத் தொடும் எவனும் தண்டனைக்குத் தப்பமாட்டான். (நீதிமொழிகள் 6:27-29)

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்இ
ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே

எனப் பாடுகிறார் திருமூலர்.

இதன் விளக்கம் யாதெனில் எனக்கு இவள்தான் மனைவி என்று உறுதிமொழி கூறி திருமணம் செய்த அன்பான மனைவி தமது வீட்டில் இருக்கும் போது மற்றொருவர் திருமணம் செய்து பாதுகாத்து வைத்திருக்கும் மனைவியர் மீது ஆசைப்படும் ஆண்கள் தமது வீட்டின் கொல்லைப்புறத்தில் காய்த்து பழுத்து தொங்கும் பலாப் பழத்தை சாப்பிட விரும்பாமல் எங்கோ காட்டு முட்செடிகளுக்கு நடுவே வளர்ந்து கிடக்கும் ஈச்சம் பழத்தை சாப்பிட ஆசைப் படுவது போன்ற முட்டாள்தனம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

மா பலா வாழை என்ற முக்கனிகளில் ஒன்றாய் இன்பப் பகுதியாய் இருப்பது பலாப்பழம். இது நன்கு காய்த்து பழுத்தால் மிக்க இன்பம் தரும் கனியாய் அமையும். அத்தகைய பலா மரத்தின் கனியை எளிதில் எவ்வகை அச்சமும் இன்றி பெற்று உண்ணலாம். தம் தோட்டத்துக் கனியாதலின் அச்சமும் பழியும் பாவமும் தீவினைக் குற்றமும் பகையும் துன்பமும் இன்றி வேண்டிய அளவு உண்ணலாம். கைப்பிடித்த மனைவியுடன் இன்பம் நுகர்தலைத் திருமூலர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். மாறாகப் பிறன்மனையை நோக்குகின்ற செயலை பிறர் ஒருவரின் வீட்டின் பின்புறத்தில் வளர்ந்துள்ள ஈச்சம் பழத்தினைத் திருடி உண்ண முற்பட்டுத் துன்பத்தைத் தருகின்ற செய்கையை போன்றது என்கின்றார். இத்தகைய செயல் செய்பவர்கள் மாந்தர்க்கு உரிய பண்பிலிருந்து விலகுகின்றவர்கள் என்பதனால் காளையர் என்று குறிப்பிட்டு அறியாமையை உடைய எருதிற்கு ஒப்பவர் என்கின்றார். இவர்கள் காமம் என்னும் குற்றத்திற்கும் களவு என்னும் குற்றத்திற்கும் உரியவர் என்பதால் இடரை துன்பத்தை தேடிக் கொள்கின்றனர் என்கின்றார் திருமூலர்.

அரசன் என்பவன் அனைவருக்கும் முதலானவன். முன் உதாரணமானவன். நாட்டு மக்கள் மட்டுமல்ல; உலக நாடுகளும் அரசனின் நலத்திட்டங்கள் மற்றும் அவனுடைய ஒவ்வொரு செயல்களையும் முனைப்போடு கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

எனவே அரசனானவன் பழி பாவத்திற்கு அஞ்சி நடந்து தன்னுடைய நற்பெயரை காத்துக் கொள்வான். ஏனென்றால் அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே என்பதையும் அறிந்திருப்பான். ஆனால் சில அரசர்களோ அரசனுக்கு ஒரு சட்டம்; மற்றவர்களுக்கு ஒரு சட்டம்; ஆண்டிக்கு ஒரு சட்டம் என்று நடப்பார்கள் அவ்வரிசையில் நடந்தவன் ஏரோது.

திருவிவிலியத்தில் ஏரோது அரசனைப் பற்றி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் தன் சகோதரன் மனைவியை வைத்திருந்தான் என்றும் அது தவறு என்று சுட்டிக்காட்டிய யோவான் தலையை வெட்டி கொல்லும் அளவிற்கு அழியாமல் நிலைநிற்கும் பழியை அடைந்தான் என்பதையும் மாற்கு நற்செய்தி நமக்கு கூறுகிறது.

ஏரோது தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான்; அவள் பொருட்டு ஆளனுப்பி யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான். ஏனெனில் யோவான் ஏரோதிடம் உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல எனச் சொல்லிவந்தார். அப்போது ஏரோதியா அவர்மீது காழ்ப்புணர்வு கொண்டு

அவரைக் கொலை செய்ய விரும்பினாள்; ஆனால் அவளால் இயலவில்லை. ஏனெனில் யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். அவர் சொல்லைக் கேட்டு மிகக் குழப்பமுற்ற போதிலும் அவருக்கு மனமுவந்து செவிசாய்த்தான்.

ஒரு நாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது. ஏரோது தன் பிறந்த நாளில் அரசவையினருக்கும் ஆயிரத்தவர் தலைவர்களுக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் ஒரு விருந்து படைத்தான். அப்போது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அரசன் அச்சிறுமியிடம் உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள் தருகிறேன் என்றான். நீ என்னிடம் எது கேட்டாலும் ஏன் என் அரசில் பாதியையே கேட்டாலும் உனக்குத் தருகிறேன் என்றும் ஆணையிட்டுக் கூறினான்.

அவள் வெளியே சென்று நான் என்ன கேட்கலாம்? என்று தன்தாயை வினவினாள். அவள் திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள் என்றாள். உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும் என்று கேட்டாள். (மாற்கு 6:17-25)

இதைக் கேட்ட அரசன் மிக வருந்தினான். ஆனாலும் விருந்தினர்முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை. உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டுவருமாறு பணித்தான். அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி அதை ஒரு தட்டில் கொண்டுவந்து அச்சிறுமியிடம் கொடுக்க அவளும் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள். இதைக் கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள். (மாற்கு 6:26-29)

இங்கு ஏரோது தன் சகோதரன் மனைவியை வைத்திருந்தான் என்றால் கண்டிப்பாக சகோதரன் உயிரோடு இருந்திருக்க வேண்டும். அரசர் என்ற பயத்தால் அவன் உறவுகள் எல்லோரும் அரசனை கண்டிக்க இயலாமல் போயிருக்கலாம். ஒருவேளை அவன் சகோதரனே யோவானிடம் தன் நிலையை சொல்லிக் கதறி இருக்கலாம். அதனால்தான் யோவான் அரசனைக் கண்டித்துக் கொண்டிருந்திருப்பார். யோவானின் கண்டிப்பால் ஏரோதியாள் கடுங்கோபம் கொண்டிருப்பாள். ஒருவேளை யோவான் சொல்வதைக் கேட்டு அவளை அரசன் விலக்கி விடுவானோ என்று பயந்து இருப்பாள். ஒருவேளை நிராகரித்து விட்டால்... அவள் செல்வாக்கு? ராஜ உபச்சாரம்? எல்லாம் பறிபோய்விடுமே.. ஆடம்பர வாழ்வு இல்லை எனில் தன் சூழ் நிலை என்னவாகும் என்றெல்லாம் எண்ணி தான் அவனைக் கொல்ல திட்டமிடுகிறாள். ஏனெனில் யோவானைத் தவிர வேறு எவரும் அரசனைக் குற்றப்படுத்த இயலாது என அறிந்து இறைவாக்கினர் உயிரைப்பறிக்க திட்டமிட்டு நிறைவேற்றுகிறாள். இதனால் அடையக் கூடாத பெரும் பழிக்கு ஆளாகினான் ஏரோது அரசன்.

பிறன் மனைவியைத் திரும்பிப் பாராத பெருமையைப் பற்றி இனியவை நாற்பது பாடல் கூறுவது:

பிறன்மனை நோக்காப் பீடினி தாற்ற

வரன் உழக்கும் பைங்கூழ்க்கு வான் சோர்வினிதே

மறமன்னர் தங்கடையுள் மாமலைபோல் யானை

மத முழக்கம் கேட்டல் இனிது.

இப்பாடலின் பொருள்இ

பிறனுடைய மனைவியைத் திரும்பிப் பார்க்காத பெருமை இனிதாகும்.

போதுமான நீர் இல்லாததால் காய்ந்து வரும் பசுமையான பயிர்களுக்கு வான் மேகத்திலிருந்து மழை பொழிவது மிக இனிதாகும்.

அரசரின் கடைவாயிலாகிய பின் முற்றத்தில் பெரிய மலை போன்ற யானைகளின் மதம் கொண்ட பிளிறலைக் கேட்பதும் இனிதாகும். எனக் கூறுகிறது இனியவை நாற்பது பாடல். பெருமைபாராட்ட விரும்புகிறவர் ஆண்டவரைக் குறித்தே பெருமை பாராட்டட்டும். தமக்குத் தாமே நற்சான்று கொடுப்போர் அல்ல மாறாக ஆண்டவரின் நற்சான்று பெற்றவரே ஏற்புடையவர் ஆவர். (2 கொரிந்தியர் 10:17-18)

*இயேசுவுக்கே புகழ்*

**- லீமா விக்டோரியா**

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்